**கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2018**

-----------------------------------------------------------------------------------------------

கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கையின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட சாதாரண செயற்பாடுகள் 3008 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.04 ஆம் பிரிவு மற்றும் 2013 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 3009 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க விசேட செயற்பாடுகள் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், கல்வி அமைச்சு நிறைவேற்றல் முகவராகக் காணப்படுகின்றதுடன் மாகாண சபைகளின் மாகாணக் கல்வி அமைச்சுக்கள் செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் முகவர்களாகக் காணப்படுகின்றன. ஆண் மற்றும் பெண் இரண்டாம் நிலை பாடசாலை பட்டதாரிகளின் வேலைவாய்ப்புத்திறனினை முன்னேற்றக்கூடிய நவீனமயப்படுத்தப்பட்ட இரண்டாம் நிலை பாடசாலைக் கல்வி முறைமையொன்றை அபிவிருத்தி செய்வது செயற்திட்டத்தின் நோக்கங்களாகக் காணப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 26,000 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொலர் 200 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 26,000 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்புச் செய்யப்பட வேண்டுமென இணக்கப்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளினை 2013 ஆகஸ்ட் 23 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2018 ஆகஸ்ட் 31 அளவில் பூர்த்தி செய்யப்படவேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 09 மாகாண சபைகளின் மாகாண கல்வித் திணைக்களங்கள் மற்றும் மாகாண கல்வி அமைச்சுக்களின் நிதிக்கூற்றுக்ளில் வழங்கப்பட்ட தகவல்கள் அதனுடன் இணைந்த கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கை இணங்குகின்றதுடன் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய நிகழ்ச்சித்திட்டத்தின் உண்மையானதும் நியாயமானதுமான நிலையைத் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்கனுக்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற

அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக்கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவைப் பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 இன் எம்ஒஎவ்பி/ஈஆர்டீ/2007/2 ஆம் இலக்க சுற்றிக்கை | 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கை 2019 மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப் படுகின்றதுடன் 2019 யூன் 13 இல் மாத்திரம் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப் பட்டிருந்தது. | பிரதான தேவைப்பாடு பூர்த்தி செய்யப்பட வில்லை. | பதிலளிக்கப்பட வில்லை. | மாகாண சபைகளின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயலாற்றல்

செயற்திட்ட நிதி உடன்படிக்கையின் பட்டியல் 03 இன் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் 33 பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிகளினூடாக 09 பணவளிப்பு இணைப்பு விளைவுகளினை அடைந்துகொள்வதற்காக அமுல்படுத்தப்பட வேண்டுமென பட்டியல்படுத்தப்பட்டது. மேலும், மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களுக்காக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கையின் பிரகாரம், மாகாண சபைகளின் கல்வித்துறையின் மீண்டெழும் மற்றும் மூலதன செலவினங்களினை எதிர்கொள்ள 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, நிதிகளின் அனைத்து மூலங்களிலும் ரூபா 139,584 மில்லியன் மொத்தக் கிரயமொன்று செலவிடப்பட்டிருந்தது. மாகாண கல்வி அமைச்சுக்கள் மற்றும் மாகாண கல்வித் திணைக்களத்தின் தொழிற்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறுபட்ட முக்கிய கணக்காய்வு அவதானிக்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ------------------------------ | ------------- | ------------------------------ | ------------------------------ |
| (அ) | கல்வித் திணைக்களத்தின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய 218,191 பாடசாலை விண்ணப்பதாரர்களில் 8.34 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 18,203 பாடசாலை விண்ணப்பதாரிகள் அனைத்து துறைகளிலும் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையத் தவறியிருந்தனர். மேலும் வட மத்திய, கிழக்கு மற்றும் தென் மாகாணங்களிலுள்ள பாடசாலை மாணவர்களில் 09 சதவீதத்தினை விட அதிகமானவர்கள் அனைத்து துறைகளிலும் அனைத்து பாடங்களிலும் சித்தியடையத் தவறியிருந்தனர். | எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் கஷ்டப் பிரதேசங்களில் அடைந்துகொள்ளப்படவில்லை. | இணங்குகின்றோம் . | காரணங்களினை புலனாய்வு செய்ய வேண்டும். |
| (ஆ) | பணவளிப்பு இணைப்பு விளைவு - 03 இன் பிரகாரம், 100 பாடசாலைகளில் தொழில்நுட்பத் துறையிலுள்ள மாணவர்களின் செயலாற்றல் தொர்பான மதிப்பீடொன்று ஆரம்பிக்கப்பட வேண்டியதுடன் தொழில்நுட்ப துறையில் பாலின உள்ளடக்க விரிவாக்கத்திற்கான நேர பிணைப்பு திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் மதிப்பீட்டினை நடாத்துவதற்கு மற்றும் அவற்றிற்கான நேர பிணைப்பு திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்பார்க்கப்பட்ட நலன்களினை குறித்துரைக்கப்பட்ட தரப்பினர் பெற்றுக்கொள்ள முடியாது போகும். | இலங்கையில் க.பொ.த உ/த தொழில்நுட்ப பிரிவுக்கான தர முன்னேற்ற திட்டம் (2018 – 2022) 2017 திசெம்பரில் கடனளிக்கும் முகவர்க்கு தயாரிக்கப்பட்டு அனுப்பப் பட்டிருக்கின்றது. | இலக்குகளினை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | பணவளிப்பு இணைப்பு வினைவு – 06 இன் பிரகாரம், க.பொ.த உயர்தரத்தின் வர்த்தகப் பிரிவுக்கான மாகாண பாடாசலைகளின் மாணவர்களின் பதிவுகளினை 43.01 சதவிதம் வரை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், வர்த்தகப் பிரிவுக்கான ஒட்டுமொத்த மாணவர்களின் பதிவு செய்தல் 22.23 சதவீதத்தில் தொடர்ந்தும் காணப்பட்டது. மேலும், வடமேல், கிழக்கு மற்றும் வட மாகாணங்களில் வர்த்தகப் பிரிவுக்கான மாணவர்களின் பதிவு முறையே 13.09 சதவீதம், 16.31 சதவீதம் மற்றும் 17.86 சதவீதமாக தொடர்ந்தும் காணப்பட்டது. எவ்வாறாயினும், கலைப் பிரிவுக்கான ஒட்டுமொத்த மாணவர்களின் பதிவு மீளாய்வாண்டில் 1.46 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட நலன்களினை குறித்துரைக்கப்பட்ட தரப்பினர் பெற்றுக்கொள்ள முடியாது போகும். | க.பொ.த உ/த வர்த்தகப் பிரிவு மாணவர்களின் பதவிக்கான டீஎல்ஆர் - 06 இன் தரவினை பகுப்பாய்வு செய்த பின்னர் இரத்து செய்யப்பட்டதுடன் அதனை அனைத்து தரப்பினரும் இணங்கியிருந்தனர். | காரணங்களினை புலனாய்வு செய்ய வேண்டும். |

### 3.2 பயன்படுத்தப்படாத வளங்கள்

| கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| மாகாணக் கல்வி அமைச்சுக்களின் மூலதன செலவினங்களினை எதிர்கொள்வதற்கு மாகாண சபைகளுக்காக மீளாய்வாண்டிற்கு ரூபா 16,007 மில்லியன் கூட்டுத்தொகையான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10,717 மில்லியன் தொகையொன்று பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், வட மத்திய மாகாணத்தின் மாகாண கல்வி அமைச்சின் மூலதன செலவினங்களினை எதிர்கொள்வதற்கு மீளாய்வாண்டிற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 5,159 | செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகள் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக பய்னபடுத்தப்படவில்லை. | இணங்குகின்றோம். | எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளினை அடைந்துகொள்வதற்கு ஒதுக்கீடுகளினை பயன்படுத்த மாகாண நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படல் வேண்டும். |

மில்லியன் தொகையான ஒதுக்கீடுகளில், ரூபா 2,237 மில்லியன் தொகையொன்று மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், ஊவா மாகாணத்தின் மாகாண கல்வி அமைசசின் மூலதன செலவினங்களினை எதிர்கொள்வதற்கு ரூபா 700 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதில், மொத்த ஒதுக்கீடுகளில் 37 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற ரூபா 443 மில்லியன் தொகையொன்று மாத்திரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டது தொடர்ந்தும் காணப்படுகின்றது.